ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சமுதாயச் சீர்திருத்த நோக்கில் அண்ணாவின் “வேலைக்காரி”

**முனைவர். க. முத்துமாரியம்மாள்**

**இணைப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,**

**யாதவர் கல்லூரி (தன்னாட்சி),மதுரை - 625 014.**

5

**ஆய்வுச்சுருக்கம்**

அண்ணாவின் “வேலைக்காரி” நாடகத்தில் பிறரைச் சுரண்டி வாழும் ஜமீன்தார், பரமானந்தனின் திட்டத்தால் தன் மகள் சரசாவிற்கு ஏற்படும் வாழ்க்கையைக் கண்டு வருந்தி இறுதியில் மனம் மாறுவது போன்று படைக்கப்பட்டுள்ளார். வேலைக்காரியாம் அமிர்தத்தை எங்ஙனமெல்லாம் சரசா துன்புறுத்தினாளோ அவ்வாறே சரசாவும் ஆனந்தனால் துன்புறுத்தப்படுகிறாள். அமிர்தத்தின் காதல் வெற்றி இறுதியில் சமதர்மத்தை வலியுறுத்தும் கொள்கையுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்நாடகத்தில் சமுதாயத்தில் நிலவி வந்த சாதிய ஆதிக்கம், ஆண்டான்-அடிமை, ஏழை-பணக்காரன், பொருந்தா மண எதிர்ப்பு, சமய விழிப்புணர்வு, சமுதாய முன்னேற்றம் போன்றவைகளுக்கு நிரந்தரத் தீர்வு கிட்ட வேண்டும் எனில் சமதர்ம சமுதாயம் உருவாதலே சிறந்த வழியாகும் என்ற கருத்துக்களை வழியுறுத்தும் நோக்கில் இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

**திறவுச்சொற்கள்**

அவலட்சணம், தரித்திரக்கம்பிகள், அன்னக்காவடி, கோழை, ஆசாரம்

**முன்னுரை**

மனிதன் தன் வாழ்வின் எல்லா நிலைகளிலும் இயற்கையையோ, மற்றொருவரையோ சார்ந்து வாழ வேண்டியிருக்கிறது. எனவே தன் மன உணர்வுகளை வெளிப்படுத்தவும், தன்னுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் பிற மனிதர்களுடன் கூடி வாழ முற்படுகிறான். மனிதனின் இத்தகைய கூடி வாழும் இயல்பே சமுதாய அமைப்பிற்கு அடித்தளமாக அமைகிறது. அச்சமுதாயத்தில் உள்ள மக்களை நெறிப்படுத்துவதற்காக ஒவ்வொரு காலகட்டத்திலும் பல அறிஞர்கள், தத்துவ ஞானிகள், சிந்தனையாளர்கள், அரசியல் தலைவர்கள் போன்றோர் தோன்றியுள்ளனர். அந்த வரிசையில் தமிழ்ச் சமுதாயத்தைத் தலை நிமிரச் செய்யத் தோன்றியவர் அறிஞர் அண்ணா. அவருடைய சிந்தனைகள் ஏராளம். தான் வளர்ந்து வாழ்வதோடு மட்டுமல்லாது, தன் சமூக மக்களையும் வளர்த்து வழி நடத்தி, பகுத்தறிவுடைய சமுதாயத்தை உருவாக்குவதே அண்ணாவின் விருப்பமாகும். அந்த அடிப்படையில் உருவானதுதான் அண்ணாவின் “வேலைக்காரி” நாடகம் ஆகும். இந்நாடகத்தின் வாயிலாக அண்ணா மக்களுக்குக்

கூற விரும்பிய பல்வேறு சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நாடகக் கதை மாந்தர்கள்**

பணமே பிரதானம் என நினைக்கும் வேதாச்சல முதலியார், பணத்திமிரு படைத்த அவரின் மகள் சரசா,வேலைக்காரி மீது இரக்க குணமுள்ள அவரின் மகன் மூர்த்தி, வீட்டு வேலைக்காரி; அமிர்தம், அவ்வூரில் வாழும் சுந்தரம்பிள்ளை, அவரின் மகன் ஆனந்தன், ஆனந்தனின் நண்பன் மணி ஆகியோர் இந்நாடகத்தின் முக்கியக் கதை மாந்தர்களாவர். இவற்றுள் ஆனந்தன் மணி என்ற இருவருள், கதைத்தலைவனுக்குரிய இலக்கணம் மணிக்கு இருந்தாலும், படைப்பிலக்கிய இலக்கணப்படி “வேலைக்காரி” நாடகத்தில் ஆனந்தன் கதைத் தலைவன் ஆகிறான். ஏனெனில் வேதாசல முதலியார் தான் தன் தந்தையின் தற்கொலைக்குக் காரணம் என்பதை அறிந்த ஆனந்தன் அவரைப் பழிவாங்கும் கதைதான் இந்நாடகம் என்றாலும் வேதாசல முதலியாரைத் திருத்த ஆனந்தனின் வழியாகத்தான் அண்ணா தம் சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துரைக்கிறார்.

பாரதியின் புதிய ஆத்திசூடி வழியுறுத்தம் கீழோர்க்கு அஞ்சேல்,சீறுவோர் சீறு,செய்வது துணிந்து செய்,நேர்படப் பேசு, நையப்புடை, பிழைக்க இடங்கொடேல், உலுத்தரை இகழ்,வெடிப்புறப் பேசு என்னும் கருத்துக்களின் விளக்கமாக அமைவது வேலைக்காரியின் பாத்திரப் படைப்புகள் என்கிறார் இரா.ஜனார்த்தனன் (முனைவர் மு.தமிழரசி, அண்ணாவின் சமூகநாடகங்களில் கருப்பொருள்,ப.592).

**சாதி ஒழிப்பு**

சமுதாயத்தில் உள்ள மூடப்பழக்க வழக்கங்களுக்கு ஆணிவேராக இருப்பவை சாதிப் பிரிவினைகள். சாதிப் பிரிவுகளும் சமயப் பிரிவுகளும் இருக்கின்ற வரையில் சமுதாயத்தில் மூடப்பழக்க வழக்கங்களும் இருக்கவே செய்யும். புத்தர் முதல் பெரியார் வரை தோன்றிய சீர்திருத்த அறிஞர்கள் பலரும் சாதியப் பரிவினைகளைச் சாடியே வந்தனர். சாதியக் கட்டமைப்புகளினால் இன்று சமுதாயத்தில் பலர் மணம் புரிந்து வாழ முடியாத அவல நிலையினைக் காண முடிகின்றது. காந்தியடிகள், இராஜாஜி போன்றோர் இத்துன்பங்கள் நீங்கச் சிறந்த வழி கலப்புத் திருமண முறைதான் என்று பேசியதோடு செயலிலும் காட்டினர். ஆனால் இந்த நாட்டிலே, “ஜாதிதான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடும் விஷம் மனத்திலே முடக்கு நோயைப் புகுத்திவிட்ட கயமை எனவேதான் பேதமற்ற சமுதாயத்தை சமத்துவத்தை சமதருமத்தை நாம் காண வேண்டுமானால் முதலில் சாதியைத் தொலைத்தாக வேண்டும்” என்று நான் சார்ந்துள்ள அறிவியக்கம் பலகாலமாக கூறி வருகின்றது.(பெ.மயிலவேலன், அ. படைப்புகளும்.

எழுச்சியூட்டும் நிகழ்ச்சிசகளும், ப.33) என்ற அண்ணாவின் பேச்சு சாதியச் சமுதாயத்தில் இருந்து மக்களை விடுவிக்கும் எண்ணத்தைப் பிரதிபலிக்கிறது.

சமுதாய நலன் நாடுவோர் திருமணத்தில் ஆதிக்கங் கொண்டிருந்த சாதிச்சிக்கலை வீழ்த்துவதற்குக் கலப்புத் திருமணத்தைச் சிறந்ததொரு படைக்கலனாகக் கண்டறிந்தனர். “கலப்பு மணத்தால் சாதி செத்தே போகும்” என்றார் கவிஞர் சுரதா (தேன்மழை ,ப.89).

இன்று சமூகத்தில் கலப்பு மணத்தால் ஏற்படும் சமூக அவலங்கலையும் சீர்கேடுகளையும் இளைய தலைமுறையினருக்கும், சமூக மக்களுக்கும் உணர்த்துவதற்காகவே படைக்கப்பட்ட இந்நாடகம் இருவேறுபட்ட சாதிகளுக்கிடையே நடைபெறும் கலப்புத் திருமணம் குறித்துப் பேசுகின்றது. வேதாசல முதலியார்,சுந்தரம்பிள்ளை,முருகேசன் நாயக்கர் ஆகியோர் குடும்பங்களில் நடைபெறும் திருமண நிகழ்வுகளைக் காட்டுவதன் வாயிலாகச் சாதியை ஒழிக்கத் தீவிர முயற்சி எடுத்துள்ளார் அண்ணா.

வேதாசல முதலியாரின் மகன் மூர்த்திக்குத் தன் வீட்டில் விவசாயத் தொழில் செய்து வரும் முருகேச நாயக்கரின் மகள் அமிர்தத்தின் மேல் காதல் ஏற்படுகிறது. அமிர்தம் வேதாசல முதலியார் வீட்டு வேலைக்காரப் பெண், நல்ல ஒழுக்கமும், நற்பண்புகளும் நிறைந்தவள். மூர்த்தி தன் காதலைப் பலமுறை அமிர்தத்திடம் பெளிப்படுத்திய போதிலும். “வேளாளர் வீட்டுப் பிள்ளைக்கும் வேலைக்காரிக்கும் கல்யாணம் நடக்க முடியுமா? நீங்கள் என்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புவது,வெள்ளாடு ஒநாயை விரும்புவது போலத்தான் (அ.வே,பக்:53:54) என்று அமிர்தம் கூறியபொழுது, “உன்னை அடையவில்லை என்றால் என் ஆவி நிலைத்திருக்காதடி கண்ணே!(அ.வே,ப.54) என்று மூர்த்தி கூறுகிறான். “இனி ஒன்றும் சொல்லப் போவதில்லை ஏதாவது தடைகள் ஏற்பட்டால், உங்கள் பாடு அவர்கள் பாடு இனி நான் உங்கள் அடிமை.(அ.வே,ப.54) என்று கூறித் தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறாள் அமிர்தம்.

பரமானந்தனாக வரும் சுந்தரம் பிள்ளையின் மகன் ஆனந்தன் வழியாக வேதாசல முதலியாருக்கு இவர்களின் காதல் தெரிய வருகின்றது. வேதாசல முதலியார் தன் மகனை விட சாதியை உயர்வாக மதிப்பதால், “நம்ம ஜாதி, குலம், ஆசாரம் ஆகியவைகளை கெடுக்காதே, இப்பவே காசு, பணம் கொடுத்து கழுதையை ஊறை விட்டே ஓட்டி விடலாம்” (அ.வே,ப.61) என்கிறார். மேலும் வேதாசல முதலியார் முருகேசனைப் பார்த்து நேரடியாகவே திட்டுகிறார். “எங்க வீட்டுச்சோறுடா, எங்க வீட்டு சோறு! தின்னு கொழுத்துப் போயி… என் மகனை வேற கையைப் பிடிச்சு இழுக்க வந்துட்டா” (அ.வே,ப.64) என்று தன் வீட்டுப் பண்ணையில் வேலை பார்ப்பவர் என்று கொஞ்சம் கூட நினைத்துப் பார்க்காமல் மனிதாபிமானமே இல்லாமல்

அவமானப்படுத்துகிற அவல நிலையைச் சாதியத்திமிரும் பணத்தாசையும் கொண்ட வேதாசலமுதலியாரின் வாயிலாகச் சுட்டிக் காட்டுகிறார் ஆசிரியர்.இதனைக் கண்டிக்கும் நோக்கில், கீ.பி இரண்டாம் நூற்றாண்டிலேயே திருவள்ளுவர், இவ்வுலகத்தில் பிறப்பால் மனிதர்கள் அனைவரும் சமமானவர்களே. சாதியால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று எவரும்மில்லை என்ற கருத்தினை,

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்”

(குறள்.972)

என்ற குறளின் வாயிலாகப் பதிவு செய்திருப்பதினைக் காண முடிகின்றது. இதே கருத்தினை ஔவையார், “சாதி இரண்டொழிய வேறில்லை” (நல்வழி,ப.45) சமூகத்தில் எவன் ஒருவன் நீதிநெறி தவறாமல் நடந்து பிறருக்கு ஒரு பொருளைக் கொடுக்கிறானோ அவனே சமூகத்தில் உயர்ந்த குலத்தோன் ஆவான் என்று தம் நூலில் விளக்கம் கூறுகிறார். இந்தப் பொல்லாத உலகில் எத்தனை சமூகச் சீர்திருத்தவாதிகள் வந்தாலும் இன்னும் சமூகம் சாதியிடமிருந்து விடுதலை பெறவில்லை என்று கூறுவதே சாலப் பொருந்தும்.

**பணக்காரர்களின் ஆதிக்கத்தை ஒழித்தல்**

இந்நாடகத்தில் பணக்காரர்களின் ஆதிக்கத்தினை அடக்க வேதாசல முதலியாரின் மகள் சரசாவை ஆனந்தன் மணமுடிப்பதாகக் காட்டியுள்ளார் ஆசிரியர். சுந்தரம்பிள்ளை வேதாசல முதலியாரிடம் தான் வாங்கிய கடனைத் திருப்பித் தர முடியாத காரணத்தினால் அவரின் கடன் தொல்லை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொள்கிறார். இதனால் மனமுடைந்த ஆனந்தன் தன் நண்பன் மணியின் உதவியால் மேவார் விலாசத்துப் பெரிய மகனாகின்றான். சுந்தரம்பிள்ளையின் மகன் ஆனந்தம்பிள்ளை பரமானந்த முதலியாராக உரு மாறி வேதாசல முதலியாரின் மகள் சரசாவை மணமுடித்து, அடுத்துக் கெடுக்கும் படலம், பணம் பாழாகும் படலம், மானம் குத்தும் படலம், கண்குத்தும் படலம் எனப் பல்வேறு வழிகளில் திட்டங்களைத் தீட்டி பணத்தாசை பிடித்த வேதாசல முதலியாரையும் பணத்திமிர் பிடித்த அவரது மகள் சரசாவையும் அடக்கி அவர்களுக்கு நல்லதொரு பாடம் புகட்டுவதினைக் காண முடிகின்றது. மேலும் இந்தப் பொல்லாத உலகில் ஆணவக்காரர்களை தந்திரங்களினால் மட்டுமே வெல்ல முடியும் என்ற நோக்கில் ஆனந்தனைப் படைத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

**பொருந்தா மண எதிர்ப்பு**

திருமணத்திற்கு வேறு எவ்வகைப் பொருத்தங்களையும் விட மணப்பொருத்தமே சிறந்ததாகும். அறிஞர் அண்ணா தம் படைப்புகளில் பொருந்தா மணங்களினால் பெண்களுக்கேற்படும் அவல நிலைகளைக் கூறி அவற்றிலிருந்து விடுதலை

அடையும் வண்ணம் அவரவர் விரும்பிய காதலர்களுடன் சேர்த்து வைக்கிறார்.அக்கால சமுதாயத்தில் திருமண நிகழ்வுகள் அவரவர் சமூகத்தினரிடையே நடைபெற்றது. அந்த வகையில் அமிர்தத்திற்கு மாப்பிள்ளை பார்க்கும் பொழுது கூட, “விடியறதுக்குள்ளாக பொண்ணைக் கூட்டிக்கிட்டு புதுப்பாளையத்திற்குப் போயிடு. அங்க நம்ம ஜாதியானா பார்த்து ஒருத்தனைக் கட்டிப் போட்டுட்டா தன்னால அடங்கிவிடும் அமிர்தம்.”(அ.வே,ப.62) என்று முருசேனின் நண்பன் கூறுவதிலிருந்து இதனை அறிய முடிகின்றது. மேலும் வசதியான கிழவனுக்குக் கட்டிக் கொடுத்த செங்கோடனின் மகள், கிழவன் இறந்ததும் மூன்று ஏக்கர் நிலத்துக்குச் சொந்தக்காரியானதை முருகேசனுக்கு நினைவுப்படுத்துகிறார் வேதாசலமுதலியார். இதிலிருந்து அன்றைய சமுதாயத்தில் நிலவியிருந்த “பொருந்தா மணத்தையும்” இந்நாடகம் பதிவு செய்துள்ளது. அடுத்ததாக அமிர்தத்திற்கு முதியவரை மணம் முடிக்க வட்டியூர் வேதாசல முதலியார் கருத்துத் தெரிவித்துப் பெண் பார்க்க மாப்பிள்ளைத் தம்பியும் தங்கையும் வருகை தரும் நேரத்தில், சமூக நாடகத்திற்குறிய வெளிப்பாடாக அமிர்தம் தன்னை அவலட்சணமாக மாற்றி, மாப்பிள்ளை வீட்டாரை விரட்டும் விதமாகக் காட்சியளிக்கும் விதத்தில் படைக்கப்பட்டிருப்பது எழுச்சி மிக்க சிந்தனையின் உறைவிடமாகத் திகழ்வதாகப் படைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இந்நாடகத்தின் மூலம் பொருந்தா மணத்தை எதிர்க்க அமிர்தம் என்ற பாத்திரம் வாயிலாக அதனை நிறைவேற்றுகிறார்.

மேலும் பொருந்தா மணத்தினையும் அதனால் ஏற்படும் தீமைகளையும் சுட்டும் பாரதிதாசன் கருத்தும் இங்கு நினையத்தகும்.

“மண்ணாய்ப் போக மண்ணாய்ப் போக
மனம் பொருந்தா மணம் மண்ணாய்ப் போக
சமூகச்சட்டமே சமூக வழக்கமே
நீங்கள் மக்கள் அனைவரும்
ஏங்கா திருக்க மண்ணாய்ப் போகவே”
(பாரதிதாசன் கவிதைகள்,ப.75)

என்று அவர் பொருந்தா மணத்தைச் சாடுவதைக் காணமுடிகின்றது.

**சமுதாய முன்னேற்றம்**

ஆனந்தன் வேதாசலத்தை வஞ்சம் தீர்க்க கத்தியைத் தீட்டுகிறான், இதனைக் கண்ட மணி ஆனந்தனை நோக்கி, “கத்தியைத் தான் தீட்டினாயே ஒழிய உன் புத்தியைத் தீட்டவில்லை நீ” (அ.வே,ப.15) என்று கூறிய அறிவுரை இளைய சமுதாயத்தினர் விழிப்புணர்வுடன் வாழத் துணை செய்கின்றது. “ஜாதிபேதமென்கிற கூண்டுக்கு; தரித்திரக் கம்பிகள் வேறு; என்றும் ஜாதி பேத

அடிமையிலிருந்து விடுதலை பெற்றுவிட்டேன்.இனி நாம் சந்தோசமாக வாழலாம்”(அ.வே,ப.62) என்றும் மூர்த்தி கூறுவதிலிருந்து சமூகம் வகுத்திருக்கும் கட்டமைப்புகளைத் தாண்டி இரு வேறு சமுதாயத்தைச் சார்ந்த இரு உள்ளங்கள் இணைந்த காதல் உணர்வினை மக்களுக்கு உணரச் செய்கின்றது. மேலும் காதலால் ஜாதியை வென்ற உத்தமி. உன் புருசன் மூர்த்தியோடு சுகமாக வாழ்ந்திரு!(அ.வே.ப.92) என்று வேதாசல முதலியாரே மனந்திரும்பி அவர் வாயால் வாழ்த்துவதின் மூலம் சமுதாய முன்னேற்றத்தைக் காண முடிகின்றது.

மேலும் நல்லவனுக்கு இந்தப் பொல்லாத உலகில் நியாயமாகப் பிழைக்க வலியில்லை,பணக்கார உலகம் பகட்டானது. “முட்டாள் புத்திசாலியாகப் போற்றப்படுவான். வீரன் கோழைப் பட்டம் பெறுவான். கோழை வீரன் பட்டன் பெறுவான். அவலட்சணமாக இருந்தாலும் அழகனாகக் கருதப்படுவான்.”(அ.வே,ப.42) என்று மணியும் ஆனந்தனும் பேசிக் கொள்கின்ற உரையாடல் சமூகத்தின் உண்மை நிலையை உணர வைக்கிறது. “சட்டம் ஓர் இருட்டறை; அதிலே வக்கீலின் வாதம் ஓர் விளக்கு. ஏழையால் அந்தப் பிரகாசமான விளக்கைப் பெற முடியாது”(அ.வே,பக்.83:84) என்று வடநாட்டு வக்கீலாக வரும் ஆனந்தன் கூறுவதிலிருந்து சமூகத்தில் சட்டம் ஏழைகளுக்கு விதித்திருக்கின்ற அவல நிலை இதுதான் என்று 1947இல் அண்ணா கூறியிருப்பதினை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

இந்நாடகமானது இருவேறுபட்ட சாதிகளுக்கிடையே நடைபெறும் கலப்புத் திருமணம் குறித்துப் பேசுகின்றது. சமய நம்பிக்கை, பகுத்தறிவு, ஆன்மீகவாதிகளின் அவலநிலை குறித்து எடுத்துரைக்கின்றது. சமுதாயத்திலுள்ள அனைவரும் சிந்துத்துச் செயல்பட வழிகாட்டுகிறது. பணத்தாசையால் மனிதன் படும் துன்பங்களை எடுத்துரைத்துப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நீங்கத் தீர்வுகளைக் கூறுகின்றது. “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற திருமூலரின் வைர வரிகளோடு முடிவுறும் இந்த நாடகம் சமத்துவ சமுதாயம் அமைய சீர்திருத்தக் கருத்துக்களை அள்ளி வழங்கும் அமுதசுரபி.

**துணை நூற்பட்டியல்**

1. பேரறிஞர் அண்ணா, “வேலைக்காரி”, பாவை பப்ளிகேசன்ஸ், 142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 600087.
2. கவிஞர் சுரதா, “தேன்மழை”, அருள் சுடர் பதிப்பகம், 3, கடம்பாடி, அம்மன் கோவில் தெரு, வளசரவாக்கம், சென்னை – 600087.
3. கவிஞர் பத்ம தேவன்,தமிழ்ப்பிரியன், “ நீதி நூல் களஞ்சியம்”, கொற்றவை பதிப்பகம், 4/2,

சுந்தரம் தெரு, தியாகராயர் நகர், சென்னை – 600017.

4. பாவேந்தர் பாரதிதாசன், “பாரதிதாசன் கவிதைகள்”, மணிவாசகர் பதிப்பகம்,31,சிங்கர் தெரு,பாரி முனை, சென்னை - 600108.
5. பேரா.பிரின்ஸ்(ப.ஆ), “அண்ணா ஒரு சமுதாயச் சிற்பி” தொகுதி-1, காவ்யா பதிப்பகம், 16,இரண்டாம் குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம், கோடம்;பாக்கம், சென்னை – 600024.
6. பெ. மயிலவேலன், “அண்ணாவின் படைப்புகளும் எழுச்சியுட்டும் நிகழ்ச்சிகளும்” தமிழகக் கல்வி ஆராய்ச்சி நிறுவனம், 48,வட்டச்சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600024.